**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S.269/2005**
**நாள்.28.04.2026**
**வா.சா.1 - மணிமுத்து**

**இடை மனு எண். 5/2026 மற்றும் 6/2026 நாள் 24.04.2026 ம் தேதியில் ஏற்பட்ட உத்தரவின்பேரில் வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.**

**2 ம் பிரதிவாதிதரப்பில் குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி-**

1. காளிப்பகவுண்டர் மற்றும் 1 ம் பிரதிவாதியும் 05.03.1983 ம் தேதி தாவா சொத்தி பொறுத்து பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான்.

2. காளிப்பகவுண்டர் 1,2 வாதிகளுக்கு திருமணத்தின்போது சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்துவைத்தார் என்றால் சரிதான், சீர்வரிசைகள் செய்யவில்லை, திருமணம் செய்துவைத்தார்.

3. வாதிகள் தன்னை நல்ல முறையில் பராமரித்துக்கொள்வார்கள் என்ற எண்ணத்தில் 05.03.1983 ம் தேதியிட்ட பாகப்பிரிவினையின் படி தனக்கு கிடைத்த சொத்துக்களையும், தனது பெயரில் உள்ள சுயார்ஜித சொத்தான தாவா சொத்தையும் 12.09.1985 ம் தேதி ஒரு பதிவு உயில் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் சரிதான்.

4. வாதிகள் காளிப்பகவுண்டரை சரியாக பராமரித்துவரவில்லை என்றால் சரியல்ல, என்னோடுதான் இருந்தார்.

5. காளிப்பகவுண்டரை வாதிகளாகிய நாங்கள் சரிவர பராமரித்துக்கொள்ளவில்லை என்பதால் 12.09.1985 தேதியிட்ட பதிவு உயில் ஆவணத்தை 10.11.1997 ம் தேதி ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான், ஆனால் 18 வருடங்களாக காளிப்பகவுண்டர் எங்களோடுதான் இருந்தார். 10.11.1997 ம் தேதியில் 12.09.1985 தேதியிட்ட பதிவு உயில் ஆவணத்தை ரத்து செய்துவிட்டு தாவா சொத்தை பொறுத்து 1 ம் பிரதிவாதிக்கு ஒரு பதிவு உயில் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் 12.09.1985 ம் தேதியிட்ட உயில் ஆவணத்தை ரத்து செய்யவில்லை, ஆனால் 10.11.1997 ம் தேதி தாவா சொத்தை பொறுத்து 1 ம் பிரதிவாதிக்கு உயில் ஆவணம் ஏற்படுத்தினார்.

6. 1ம் பிரதிவாதிக்கு வாரிசு யாரும் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியினுடைய அத்தை மகன் வழி பேரனான ரகுநாதன் என்பவரை 1ம் பிரதிவாதி தத்தெடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல.

7. காளிப்பகவுண்டர் 13.03.1998ம் தேதி 1ம் பிரதிவாதியின் வீட்டில் இறந்தார் என்றால் சரிதான், அதுவும் எங்களுக்கு பாத்தியப்பட்ட வீடு தான்.

8. 13.03.1998ம் தேதி காளிப்பகவுண்டர் இறந்தவுடன் 10.11.1997ம் தேதியன்று 1ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்படுத்தப்பட்ட பதிவு உயில் ஆவணம் நடைமுறைக்கு வந்தது என்றால் சரியல்ல. அவ்வாறு நடைமுறைக்கு வந்தது என்றாலும், அதனடிப்படையில் அவர் பெயரில் பட்டா பெற்று அனுபவித்துவந்துள்ளார் என்றால் சரியல்ல.

9. தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி அனுபவித்து வந்து 3ம் நபருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். கிரையம் பெற்ற 3ம் நபரை தாவா வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான், வழக்கு நிலுவையில் இருந்த சமயம் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளதால் தரப்பினராக சேர்க்கவில்லை. மேற்படி 3ம் நபரை வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் தாவா வழக்கானது வழக்கிற்கு தேவையான அவசிய தரப்பினரை சேர்க்காத தோசத்திற்கு ஆட்பட்டுத்தால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

10. வழக்கிற்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**